## DEPOSITION OF WITNESS
## In the Court of Judicial Magistrate No.II, Mettur
**Case No : C.C. 278/2020**

**Prosecution witness : அ.சா. 6** **Date : 24.07.2025.**

| Name : Palanisamy | Caste : |
|---|---|
| Father's Name : | Calling : |
| Village : | Religion : |
| Taluk : | Age : |

**(Accused 3 present. ) (Accused 1, 2, 4 absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் தமிழ்நாடு காவல் துறையில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து கடந்த 30.06.2025ம் தேதி பணி ஓய்வு பெற்றேன். கடந்த 18.12.2019ம் தேதி சேலம் மாவட்டம், ஜலகண்டாபுரம் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியிலிருந்த போது ஜலகண்டாபுர காவல் நிலைய முதல் நிலை காவலர் முத்துகுமார் என்பரை அனுப்பி ஜலகண்டாபுரம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் குழந்தை கவுண்டர் மகன் ராஜி என்பவர் உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்தவரிடம் வாக்குமூலம் பெற்று என்னிடம் ஆஜர் செய்ததை ஜலகண்டாபுரம் காவல் நிலைய குற்ற எண்.255/2019, இதச பிரிவு 294(பி), 323, 324, 355 ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.4 ஆகும்.**

2) பிறகு புலன் விசாரணை அதிகாரி ஆகிய நான் புலன் விசாரணை நகலை எடுத்துக்கொண்டு கடந்த 18.12.2019 ம் தேதி மதியம் 2.30 மணிக்கு சம்பவ இடம் ஆட்டுகாரனூர் உள்ள வாதிக்கு சொந்தமான காலி நிலத்தில் சென்று சாட்சிகள் மனோகர் மற்றும் சிவா ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தார். வரைபடம் **அ.சா.ஆ5** ஆகும்.

4. பின்பு சாட்சிகள் ராஜி, சண்முகம், அருண், சிவா, மனோகரன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். இவ்வழக்கில் காயமடைந்த ராஜி என்பவருக்கு முதலில் ஜலகண்டாபுரம் அரசு மருத்துவமனைக்கு சென்று அங்கு சிகிச்சை பெற்று பிறகு மேல் சிகிச்சைக்காக மேட்டூர் அரசு மருத்துவமனையில் சேர்ந்தார். அங்கு சிகிச்சை அளித்த மருத்துவர் ரேவதி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, விபத்து பதிவேடு பெற்றேன். ஜலகண்டாபுரம் அரசு மருத்துவமனையில் வழங்கப்பட்ட விபத்து பதிவேடு **அ.சா.ஆ.6**ஆகும். மேட்டூர் அரசு மருத்துவமனையில் வழங்கப்பட்ட விபத்து பதிவேடு கூடிய காயச் சான்றிதழ் **அ.சா.ஆ.7**ஆகும். காயம் பட்டவருக்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயம் என சான்று வழங்கப்பட்டது.

5. இவ்வழக்கின் எதிரிகள் கடந்த 20.12.2019 ம் தேதி ஆகியோர் கைது செய்யப்பட்டு தக்க வழிக்காவல் மூலமாக நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டனர். மற்றஎதிரிகள் கடந்த 12.08.2016-ம் தேதி மாண்புமிகு மாவட்ட நீதிமன்றதில் முன்ஜாமீன் பெற்றதால் கைது செய்ய மார்கமில்லை.

6. இவ்வழக்கின் புலன் விசாரணையில் எதிரிகள் மீதான குற்றம் உண்மை எனத் தெரிய வந்ததால் எதிரி மீது கடந்த 18.09.2020ம் தேதி குற்ற எண்.255/2019, இதச பிரிவு 294(பி), 323, 324, 355 ஆகிய பிரிவுகளின் கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>.**

7. இந்த வழக்கின் புகார்தாரர் ராஜியின் மீது எதிரிகள் புகார் அளித்து நிலைய குற்ற எண்.256/2019 ஆக பதியப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது இதே நீதிமன்றத்தில் STC.No.586/2021 என்று நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். என் விசாரணையின் படி எதிரிகளுக்கும் புகார்தாரருக்கும் என்ன பிரச்சனை என்று தெரிந்து கொண்டேனா என்றால் புகார்தாரர் ராஜி அவருடைய இடத்தை எதிரிகள் அவர்களுடைய இடம் என்று சொல்லி பிரச்சனை செய்ததாக தெரிந்து கொண்டேன். பிரச்சனைக்குரிய இடம் யார் பெயரில் உள்ளது என என் விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொள்ளவில்லை.

8. 1ம் எதிரி சின்னபையன் என்பவர் ராஜி மீது மேட்டூர் உரிமையியல் நீதிமன்றத்தில் OS 156/2018 என்ற வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது பற்றி தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். என் விசாரணையில் 2ம் எதிரி ரவி புகார்தாரரை கம்பியை எடுத்து வலது கன்னத்தில் தாக்கியதாக சொல்லியுள்ளாரா என்றால் வலது பக்க நெற்றியில் அடித்ததாக தான் சொல்லியுள்ளார்.

9. என்னுடைய விசாரணையில் 3 மற்றும் 4 எதிரிகள் ஆகியோர் செருப்பால் புகார்தாரரின் கன்னத்தில் அடித்ததாக சொல்லியுள்ளாரா என்றால் 3ம் எதிரி மட்டும் செருப்பால் முதுகில் தாக்கியதாக சொல்லியுள்ளார். என் விசாரணையில் இவ்வழக்கின் கண்ணுற்ற சாட்சிகள் யார் யார் என்றால் சண்முகம், அருண் ஆகியோர் கண்ணுற்ற சாட்சிகள் ஆவார்கள். இவ்வழக்கில் அ.சா.4 அருண் என்பவர் நீதிமன்றத்தில் சம்பவத்தை பற்றி தனக்கு தெரியாது என்று சொல்லியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

10. புகார்தாரருக்கு எதிரிகள் மீது ஏற்கனவே இருந்த முன்விரோதம் காரணமாக ஒரு தவறான புகார் அளித்துள்ளார் அதனை சரிவர விசாரிக்காமல் தவறுதலாக எதிரிகள் மீது முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்து அதற்கு ஆதரவாக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இரண்டு வழக்குகளில் நான் தான் விசாரணை அதிகாரி என்றால் ஆமாம். என் விசாரணைப்படி யார் பாதிக்கப்பட்டதாக தெரிந்து கொண்டேன் என்றால் இல்லை.

11. இவ்வழக்கின் புகார்தாரர் மருத்துவமனையில் சேர்க்கும் போது அடையாளம் தெரியாத 15 நபர்கள் அடித்ததாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். உண்மையில் சம்பவம் நடந்திருந்தால் 4 பேர்கள் மட்டும் அடித்ததாக சொல்லியிருப்பார் என்றும் அவ்வாறு சம்பவம் நடைபெறதாததால் தான் மருத்துவரிடம் 15 நபர்கள் என்று சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. இந்த வழக்கின் புகார்தாரர் தான் எதிரிகளை அடித்து அதிலிருந்து தப்பிக்க எதிரிகள் மீது ஒரு புகார் அளித்துள்ளார் என்றால் சரியல்ல. நான் சம்பவயிடத்திற்கு

செல்லாமல் காவல் நிலையத்தில் வைத்து மாதிரி வரைப்படம் மகஜர் தயார் செய்தேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.